

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2019 JANUARY

மலர்: 12 இதழ்: 4 ஜனவரி 2019 விலை: ரூ. 10

## அஸ்திவாரம் இல்லாத ஆளுமை வளர்ப்பு



Baseless Personality development

## கொலை கொலையாகத் தற்கொலைகள்!



## மனஅமைதிக்கான மாமருந்துகள்

## ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்




# இறைவன் இருக்கிறான் கலங்காதே!

● “என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய கருணையில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் – நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் – நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்கக் கருணையுடையவன்” (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் 39:53)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 4 ஜனவரி 2019 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

கொலை கொலையாகத் தற்கொலைகள்!-2
அஸ்திவாரம் இல்லாத ஆளுமை வளர்ப்பு -6
ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்
நம்மை நாமே அறிந்து கொள்வோம் -8
படைத்தவனை பகுத்தறிவு கொண்டு அறிதல் -11
இறைவன் அல்லாதவற்றிடம் ஏமாறாதிருத்தல் -13
மன அமைதிக்கான மாமருந்துகள்-15
வாழ்க்கையின் நோக்கம் பற்றி அறிதல்-16
வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை அறிந்து பயணித்தல் -18
தற்கொலை பற்றி இறைவன்-20
ஊகங்களைத் தவிர்த்து உறுதியானதைக் கடைபிடித்தல்-21
தோல்விகளை எதிர்கொள்ளும் நிதானம்-22
இறைவன் பரிந்துரைக்கும் அழகிய ஆளுமை!-24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**



# கொலை கொலையாகத் தற்கொலைகள்!



ஏற்றத்தாழ்வுகள் வாழ்க்கையின் நியதி என்பதை அறியாதோர் இல்லை. ஆயினும் ஏற்றங்கள் வரும்போது ஏற்றுக்கொள்ளும் மனம் தாழ்வுகள் வரும்போது தகர்ந்து போகிறது!

கடந்த சில நாட்களுக்கு முன்னால் கஜா எனும் பெயருடைய பெரும் புயல் தமிழகத்தின் பல பகுதிகளை தாக்கியது. உயிர்கள், விலங்குகள், மரங்கள், வீடுகள், விவசாயம், தொழில் என பலவற்றையும் திடீரென இழந்து மக்கள் செய்வதறியாது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கு முன்னரும் பல பேரழிவுகள் நம்மைக் கடந்து சென்றுள்ளதை நாம் அறிவோம்.

மனிதன் பிறந்ததில் தொடங்கி இறக்கும் வரை அவனது வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு சோதனைகளைக் கடந்தே போக வேண்டியுள்ளது. செல்வம், வறுமை, ஆரோக்கியம், நோய், இலாபம், நஷ்டம் இளமை முதுமை என ஒன்றுக்கொன்று முரணான நிலைகளைக் கொண்டதே வாழ்க்கை. இதில் ஆரோக்கியத்தோடு வாழ்ந்தவர்கள் திடீரென நோயுறும்போதும், செல்வ வளத்தோடு வாழ்ந்தவர்கள் திடீரென வறுமைக்குத் தள்ளப்படும் போதும் பெரும்பாலும் வாழ்க்கையையே வெறுத்து விடுகிறார்கள். தற்கொலைகளில் தஞ்சம் புகுகிறார்கள்.

## அதிர வைக்கும் புள்ளிவிவரங்கள்

தேசிய குற்றவியல் ஆவண காப்பகத்தின் (NCRB) அறிக்கைப் படி நாளொன்றுக்கு 371 தற்கொலைகள் நடப்பதாக சமீபத்திய தகவல் கூறுகிறது

- தற்கொலைச் சாவுகள் பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையானவை அல்ல. ஏனென்றால் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்து திரட்டப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்துத் தான் நேஷனல் கிரைம் ரெக்கார்ட் பீரோ, தற்கொலை பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடுகின்றது. ஆனால் நாட்டில் நடக்கும் எல்லா தற்கொலைகளுமே போலீஸின் கவனத்திற்கு வந்து விடுவதில்லை. பல தற்கொலைகள் விபத்து என்றோ, நோயால் மரணம் என்றோ சொல்லி உறவினர்களால் உண்மை மறைக்கப்பட்டு விடுகின்றன. காரணம் ஏற்கனவே நொந்துபோய் உள்ள உறவினர்கள் ஆஸ்பத்திரி, போஸ்ட்மார்ட்டம், போலீஸ் என்ற அலைச்சல்களை விரும்புவதில்லை.
- தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கும் ஐந்து பேரில் ஒருவர் தான் உயிர் இழக்கின்றார் என்கிறது புள்ளி விவரம். இந்தப் புள்ளி விவரத்தின் படி பார்த்தால் ஆண்டு தோறும் நாட்டில் தற்கொலை செய்ய முயற்சிக்கும் மக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்க வாய்ப்புள்ளது

## எதற்காக தற்கொலைகள்?

எதற்காகவெல்லாம் தற்கொலைகள் நிகழ்கின்றன என்ற தகவல்களை காப்பகம் பதிவு செய்துள்ளது. பொதுவாக குடும்பப் பிரச்னைகள், எய்ட்ஸ், புற்றுநோய் போன்ற நாள்பட்ட, தீராத நோய்கள், காதல் தோல்வி,

வேலையின்மை, ஏழ்மை, பரீட்சையில் தோல்வியுறுவது, பொருளாதார நிலையில் ஏற்படும் திடீர் பின்னடைவு, சொத்துத் தகராறு, தொழில் நஷ்டம், போதைக்கு அடிமையாதல், வரதட்சணைப் பிரச்சினை, பாலியல் பலாத்காரம், முறையற்ற கர்ப்பம், விவாகரத்து, குழந்தையின்மை, பிரியத்துக்குரியவர்களின் மரணம்... என எத்தனையோ காரணங்கள் காணப்படுகின்றன...

**சற்று விரிவான உதாரணங்கள்**

- சிறுவயதில் ஏற்பட்ட இன்னல்கள், வறுமை.
- இளம் வயதில் பள்ளியைவிட்டு நீங்குதல், நீக்கப்படுதல்.
- பெற்றோருக்கு இடையே பிரச்னை, அதன் காரணமாக பெற்றோர் பிரிதல்.
- நண்பர்களோடு கருத்து மாறுபாடு, பிரச்னை, உறவு முறிதல்.
- ஏதோ காரணத்தால் வேலையிலிருந்து நீக்கப்படுதல் நிறுவனத்தில் இருந்து ஆள்குறைப்பு காரணமாக நீக்கப்படுதல்.
- குடும்ப உறவுகளால் மனரீதியான பிரச்னைகளை எதிர்கொள்ளுதல்... மனப் பதற்றம், மனஅழுத்தம் ஏற்படுவது போன்றவை.
- சமுதாயரீதியாக ஒதுக்கப்படுதல்.
- மாற்றுத்திறனாளியாக இருந்து, அதன் காரணமாக மற்றவர்களால் மனக்கசப்புக்கு ஆளாகுதல்.
- சட்டச் சிக்கலில் மாட்டிக்கொள்வது.
- சுயகௌரவத்துக்கு பங்கம் ஏற்படும் நிலைமை வந்தால், அதனால் மனதளவில் பாதிக்கப்படுவது.
- உறவினர்களில் முக்கியமானவர் இறந்துபோவது அல்லது பிரிந்து போவது.
- உறவினர்களோடும் மற்றவர்களோடும் உறவின்மை (Belongingness)
- மற்றவர்களுக்கு நாம் பயனில்லாமல் இருக்கிறோம் என்கிற நினைப்பு.
- மற்றவர்களுக்கு நாம் சுமையாக, பாரமாக இருக்கிறோமோ என்று நினைத்துக்கொள்வது.
- மீளாத்துயரம்.. உதாரணமாக, திருமணம் செய்யும் அளவுக்கு வளர்ந்த மகன் இறந்து போவது, பெற்றோரை பாதிக்கும் தாங்க முடியாது. சிலருக்கு அந்தத் துயரம் வாழ்நாள் முழுக்க தோய்ந்து இருக்கும். எப்போது சமயம் கிடைக்கும், அவர்களோடு சேர்ந்து போய்விடலாம் என்று காத்துக்கொண்டிருப்பார்கள்.

**மாணவர்களைப் பொறுத்த வரை...**

- பரீட்சையில் தேர்ச்சி அடையாமை.
- பள்ளியில் மற்ற மாணவர்களுடன் சுமுகமாக இருக்க முடியாமல் போதல்.
- மற்ற நண்பர்களால் ஒதுக்கிவைக்கப்படுதல்.
- உடல்ரீதியாக ஏதாவது குறைபாடு இருந்தால், அதனால் சுயபச்சாதாபம் ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்படுவது...

இவ்வாறு ஒவ்வொரு தரப்பாரிடமும் வெவ்வேறு காரணங்களை நாம் காண முடியும்

**தீர்வுகளாகப் பரிந்துரைக்கப் படுபவை :**

மன நல மருத்துவர்களும் உளவியல் நிபுணர்களும் கீழ்கண்ட தீர்வுகளை பரிந்துரைப்பதைக் காணலாம்.

- குழந்தைகளுக்கு பள்ளியிலேயே தோல்வியால் ஏற்படும் ஏமாற்றத்தை எதிர்கொள்ளும் பக்குவத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
- அம்மா, அப்பா இருவரும் ஒரே மாதிரியான நிலைப்பாட்டோடு பிள்ளைகளை வளர்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு வெளியுலகத் தொடர்பை ஏற்படுத்துவது, விளையாடவிடுவது அவசியம். குழந்தைகளின் ஆளுமைத்திறன் வளர அது உதவும்.
- விரக்தி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏமாற்றங்களைத் தாங்கிக்கொள்ளும் குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- இப்போது தற்கொலை எண்ணம் வருபவர்களுக்கு கவுன்சலிங் கொடுக்க பல மையங்கள் இருக்கின்றன. தொலைபேசியில்கூட தொடர்புகொண்டு அவர்களுடன் பேசலாம்.
- உறவினர்களுடனான உறவைப் பேணுவது நண்பர்களுடன் அதிகமான நேரத்தைச் செலவிடுவது ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பது.
- ஓய்வுகாலத்தைக்கூட பயனுள்ள வகையில் ஏதாவது அமைப்போடு சேர்ந்து பணியாற்றுதல், மற்றவர்களுக்கு உதவி செய்வது என அர்த்தமுள்ளதாக வாழ்க்கையை மாற்றிக்கொண்டால், இந்த எண்ணம் வராது.
- தற்கொலை எண்ணத்தைத் தூண்டும் இடங்களைத் தவிர்ப்பது நல்லது. உயரமான இடங்கள் (செல்போன் டவர், லைட் ஹவுஸ்) பாதுகாப்பற்ற இடங்களில் அதை நெருங்க முடியாதபடி தடைகளை (Barricade) ஏற்படுத்தலாம். அதற்கு அரசு ஆவன செய்யலாம்.
- தற்கொலைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களும் (துப்பாக்கி போன்றவை) பூச்சிகொல்லிகள், போன்றவை எளிதில் கிடைக்காத மாதிரி அரசு கட்டுப்படுத்துவது.
- அரசுப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே, பெற்றோரே குழந்தைகளை எதையும் எதிர்கொள்ள மனோரீதியாக தயார்ப்படுத்த வேண்டும். பரீட்சை வாழ்க்கையில் ஒருமுறை மட்டும் நடப்பதல்ல. ஒரு மாதம் கழித்து இன்னொரு பரீட்சை எழுதிக்கூட தேர்ச்சி பெற்றுவிடலாம் என தைரியம் கொடுக்கலாம். இது ஒரு தற்காலிகத் தோல்வி இதற்காக நிரந்தரமாக ஒரு முடிவைத் தேடிக்கொள்ளக் கூடாது என்ற விஷயத்தை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இதை ஊடகங்களிலும் பரவலாகச் சொல்ல வேண்டும்.



- பள்ளிகளில் ஸ்டுடன்ட் கவுன்சலர்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

ஒரு மாணவனுக்கோ, மாணவிக்கோ பிரச்சினை வரும்போது அவர்களுக்கு உரிய ஆலோசனை தர வேண்டும்.

● நாட்டில் பஞ்சம், இயற்கைப் பேரிடர்கள், போன்றவை நிகழும்போது மக்கள் வறுமைக்குத் தள்ளப்படுகிறார்கள். அந்நிலைகளில் தற்கொலைகள் அதிகரிக்கும். அந்த நேரத்தில் அரசும் மக்களுக்கு உதவ வேண்டும்.

## ஏட்டுச்சுரைக்காய் போன்ற தீர்வுகள்

மேற்கண்ட தீர்வுகள் நடைமுறைப் படுத்தப் பட வேண்டுமானால் அதற்கான முறையான உந்துதல் தீர்வை நடைமுறைப் படுத்தப் போகிறவருக்கும் தற்கொலைக்கு முயற்சிப்பவருக்கும் இருக்க வேண்டும். அப்படியே அவை நடைமுறைப்படுத்தப் படுமானாலும் எந்த அளவுக்கு தற்கொலைகளைத் தடுக்கும் என்பது சந்தேகத்துக்குரிய விடயமே. காரணம் மனித மனம்தான் இங்கு முக்கியமான காரணி. இது முக்கியமாக பண்படுத்தப்படாத வரை தீர்வு என்பது எட்டாக்கனியாகவே தொடரும் என்பதில் ஐயமில்லை. எந்த ஒரு மனிதனும் தான் சந்திக்கும் வாழ்க்கைப் பிரச்சினைக்கு தற்கொலைதான் தீர்வு என்று அவனுக்குத் தோன்றுவதற்கு முக்கியமான காரணம் அதனால் தனக்கு எந்த பாதிப்பும் இழப்பும் இல்லை என்று வலுவாக நம்புவதால்தான். அதனால் தனக்கு எந்த பின்விளைவுகளும் நேரப்போவது இல்லை என்ற எண்ணமே தற்கொலைக்கு மிகப்பிரதானமான காரணம் என்பதே உண்மை! அதாவது வாழ்க்கை என்பது அர்த்தமற்றது, நோக்கமற்றது, ஒரு மாயை, வாழும் வரைதான் வாழ்க்கை அதற்குப்பிறகு மண்ணோடு மண்ணாகிப் போகிறோம், வாழ்க்கை என்பது தற்செயலானது இங்கு எப்படி வாழ்ந்தாலும் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்பன போன்ற உணர்வுகளும் அந்த உணர்வுகளை ஊக்குவிக்கும் பரப்புரைகளுமே தற்கொலைக்குத் தள்ளும் முக்கிய காரணிகள் என்பதை நாம் உணரவேண்டும்.

## இறைவன் தருவதே தீர்வு

மாறாக மனித மனங்களில் பகுத்தறிவு பூர்வமான இறை நம்பிக்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றிய தெளிவும் ஏற்படுத்தினால் மட்டுமே தற்கொலைகளை ஆக்கபூர்வமான முறையில் தடுக்க முடியும்.

மனித வாழ்வில் மன அமைதியும் சோதனைகள் வரும்போது எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையும் தைரியமும் இல்லாமல் போவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று நாம் யார்? இந்த வாழ்க்கை என்பது எதற்காக? இதன் பின்னணி என்ன? நாம் ஏனிங்கு உள்ளோம்? இங்கிருந்து எங்கே போகிறோம்? என்ற கேள்விக்கான பதில்களை அறிய முற்படாமையே. இக்கேள்விக்கான தெளிவான பதில்களை இவ்வுலகைப் படைத்த இறைவனே தன் தூதர்கள் மூலமாக வழங்கியுள்ளான். அந்த இறைத் தூதர்களில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர் மூலமாக அருளப்பட்ட வேதமே திருக்குர்ஆன். திருக்குர்ஆனில் இருந்தும் நபிகளாரின் வழிகாட்டுதல்களில் இருந்தும் மனஅமைதி மற்றும் தன்னம்பிக்கை வளர்ப்பதற்கான வழிகளை அறிய முற்படுவோம் வாருங்கள்.

# அஸ்திவாரம் இல்லாத ஆளுமை வளர்ப்பு

நெரிசல் நிறைந்த பேருந்து ஒன்றில் பயணம் செய்யும் பயணி ஒருவரிடம் கண்டக்டர் வந்து, "அய்யா, எங்கே போகிறீர்கள்?" என்று கேட்கிறார்.

அந்தப் பயணியோ, "எங்கே போகிறேன்?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு பேந்தப்பேந்த விழிக்கிறார்.

தொடர்ந்து கண்டக்டர், "நீங்கள் எங்கே ஏறினீர்கள்?" என்கிறார்.

"தெரியாது"

"சரி, நீங்கள் யார்?" என்கிறார் கண்டக்டர்.

"தெரியாது" என்று மீண்டும் சொல்கிறார் பயணி.

இவரைப் பற்றி மக்கள் என்ன சொல்வார்கள் என்பதை நாம் அறிவோம். இதைப் போலவே இருக்கிறது இன்று மக்களில் பலருடைய நிலையும்.

ஆம் சமீபத்திய செய்தியைப் பாருங்கள்..

● **சங்கர் ஐ.ஏ.எஸ் அகாடமியின் தலைவர் சங்கர் குடும்ப பிரச்னை காரணமாக தற்கொலை செய்துகொண்டார்.**

எல்லா முன்னணிப் பத்திரிகைகளிலும் வந்த செய்தி இது.




நாள்: அக்டோபர் 11, 2018.

தமிழ்நாட்டில் இருந்து பல ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், அரசு அதிகாரிகளை உருவாக்கிய பெருமைக்கு சொந்தக்காரர் சங்கர். முக்கியமாக இந்தியாவெங்கும் கலெக்டர்களாகவும், போலீஸ் கமிஷனர் களாகவும், எஸ் பிக்களாகவும், வெளியுறவுத் துறை செயலர்களாகவும் இருப்பவர்களில் பல பேர் சங்கரின் மாணவர்கள். இப்போது சங்கர் ஐ.ஏ.எஸ் அகாடமியில் வருடத்துக்கு பல ஆயிரம் மாணவர்களுக்கும் மேல் படித்து வருகிறார்கள்.

IAS அகாடமி வைத்து நாளைய ஆளுமைகளை உருவாக்கும் பணி செய்து வந்த சங்கர், குடும்ப பிரச்சனைகளால் தற்கொலை செய்து கொண்டார் என்பது எவ்வளவு வேதனையான ஒரு நிகழ்வு! நாட்டில் உயர்ந்த ஒரு பதவிக்காக வைக்கப்படும் பரீட்சையில் தேர்வதற்காக மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் ஒரு நபர் வாழ்க்கை என்ற அதிமுக்கியமான பரீட்சையில் தோல்வி அடைவது மிகமிக சோகமான ஒன்றல்லவா?

## வாழ்க்கையின் முக்கியத்துவம் அறியாமல் வளரும் மாணவர்கள்

● இவர் மட்டுமல்ல வருடாவருடம் பரீட்சை முடிவுகள் வெளியாகும் பல மாணவர்கள் மிகவும் அற்பமான காரணங்களுக்காக தற்கொலை செய்து கொள்வதை அவ்வப்போது செவியுறுகிறோம். பள்ளிப் பருவத்தில் இருந்து உயர்கல்வி பெற்ற பட்டதாரிகள் வரை அவர்களில் அடங்குவர்.

தேசிய குற்றவியல் ஆவணக்காப்பகம் NCRB அறிக்கைப் படி ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்கிறான். பலருக்கும் பல காரணங்கள்!

வாழ்வென்றால் அவ்வளவுதானா? அவ்வளவு அலட்சியம்!! அவ்வளவு காலம் இராப்பகலாக படித்ததும் பாடுபட்டதும் இந்த ஒரு முடிவிற்காகவா? அவர்கள் மீது உயிரையே வைத்து இராப்பகலாக உழைத்து சம்பாதித்து வளர்த்ததும் அதற்காகத்தானா? படித்தும் அவர்களுக்கு அறிவு என்பது ஏன் வளராமல் போயிற்று? என்ன காரணம்?

”மரணம் மட்டுமே எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு... இறந்து விட்டால் எல்லாமே முடிந்துவிடும்” என்ற சிந்தனைதான் இதற்குக் காரணம். பிள்ளைகளுக்கு மட்டுமல்ல... பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இது பற்றிய தெளிவு கிடையாது என்பதே உண்மை!

## தேவை வாழ்க்கையின் நோக்கம் பற்றிய கல்வி

உண்மையில் மரணம், முடிவில்லா மற்றொரு வாழ்க்கையின் ஆரம்பம். இந்த உலகில் நாம் செய்யும் செயல்கள்தான் அந்த நிரந்தர வாழ்க்கையின் வசதிகளை முடிவு செய்யும் என்ற சிந்தனை முழுமையாக விதைக்கப்பட்டால் மட்டுமே இது போன்ற தற்கொலைகளை தவிர்க்க முடியும். கல்விக்கூடங்களில் வெறுமனே உயர்ந்த பதவியும் வருமானமும் பெறுவதற்கான கல்வி அறிவு மட்டும் போதிக்கப்பட்டால் போதாது. அவர்கள் கல்விக்கூடங்களில் செலவிடும் அவர்களின் இளமைக் காலம்தான் அவர்களின் உண்மையான ஆளுமைகளை வடிவமைக்கும் காலகட்டமாகும். மாணவர்கள் வாழ்க்கையைப் பற்றியும் மரணம் பற்றியும் வாழ்க்கையின் நோக்கம் பற்றியும் ஆராய்தலை ஊக்குவிக்கும் முகமாக பாடத்திட்டங்கள் அமைக்கப்படவேண்டும். குறைந்தபட்சம் அவற்றைப்பற்றி மதங்கள் என்ன கூறுகின்றன என்பது பற்றியாவது பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

● **அவன் மரணத்தையும் வாழ்வையும் ஏற்படுத்தினான் உங்களில் யார் மிகச் சிறந்த செயல் புரியக்கூடியவர் என்று உங்களைச் சோதிக்கும் பொருட்டு! மேலும், அவன் வல்லமை மிக்கவனாகவும் பெரும் மன்னிப்பாளனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 67:2)**


அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் பெயரால்....

**நம் இந்திய திருநாட்டின் குடியரசு தின பெருவிழா**

**நாள் : 26.01.2019 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி (இறைவன் நாடினால்)**

**இடம் : கோல்டன் மஹால், சிங்காரத்தோப்பு, திருச்சி - 8.**

நிகழ்ச்சியில்...

● ஏக இறைவனின் அருட்கொடை குர்ஆன்

● இஸ்லாத்தில் பெண்ணுரிமை

● இஸ்லாம் குறித்த கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும்.

● விருந்து உபசரிப்பு

● அனைத்து மத சகோதர சகோதரிகள் குடும்பத்துடன் வருக! வருக! இறையருளைப் பெறுக!

நிகழ்ச்சி ஏற்பாடு:

சமூக சகோதரத்துவ இஸ்லாமிய பேரவை அறக்கட்டளை, திருச்சி.

**Ph.:94427 09087**

**ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்**

# நம்மை நாமே அறிந்து கொள்வோம்


மன அமைதியும் தன்னம்பிக்கையும் இல்லாமல் போவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று நாம் யார்? இந்த வாழ்க்கை என்பது எதற்காக? இதன் பின்னணி என்ன? நாம் ஏனிங்கு உள்ளோம்? இங்கிருந்து எங்கே போகிறோம்? என்ற கேள்விக்கான பதில்களை அறியாமல் இருப்பதே. இக்கேள்விகளுக்கு தெளிவான விடை காண்பதுதான் மன அமைதிக்கும் தன்னம்பிக்கைக்குமான முதல் படிக்கல். பகுத்தறிவின் பயன்பாடு இங்குதான் முக்கியமாக வேண்டும்.

ஆம் உறவுகளே, நாமாக நாம் இங்கு வரவில்லை என்பது உண்மை!

நமது, நிறம், மொழி, நாடு, தாய், தந்தை, உறவுகள் இவை எவையும் நாமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அமைந்தவை அல்ல என்பதும் உண்மை!

நமது என்று நாம் சொல்லிக்கொள்ளும் உடல், பொருள், ஆவி என இவை எவையும் நமதுமுழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதும் உண்மை! இவற்றுள் ஆவி அல்லதுஉயிர் என்பது பறிக்கப்பட்டால் மற்ற அனைத்தும் நம்மைக் கைவிட்டுப்போகும் நிலைமை உள்ளதை அறிவோம். உடல் என்ற கூட்டுக்குள் நாம் வந்ததும் இதை விட்டுப் பிரிவதும் நம்மைக் கேட்டு நடப்பவை அல்ல என்பதையும் அறிவோம்.


### நம் உடல் என்ற பேரற்புதம்




ஒரு அற்ப இந்திரியத் துளியில் இருந்து தொடங்கி படிப்படியாக பல கட்டங்களைக் கடந்து கருவாக உருவாகி கருவறையில் சொகுசாக வளர்ந்து உரிய பக்குவம் அடைந்த பின்குழந்தையாக வெளிவந்து தொடர்கிறது நம் ஒவ்வொருவரதும் வாழ்க்கைப் பயணம்! நம்உடல் என்ற மாபரும் தயாரிப்பு (product) எவ்வளவு அற்புதங்களைத் தாங்கி நிற்கிறது! ஒவ்வொரு செல்களும் அதற்குப் பின்னால் வழங்கப்படும் கட்டளைகளுக்கு ஏற்ப இதயமாகவும், சிறுநீரகமாகவும், சிறுகுட லாகவும் பெருங்குடலாகவும் வயிறாகவும் நுரையீரலாகவும் கல்லீரலாகவும் மண்ணீரலாகவும் மூளையாகவும் எலும்பாகவும் தசையாவும் ஜவ்வாகவும் கண்களாகவும் காதுகளாகவும் தோலாகவும் முடியாகவும் நகமாகவும் இன்ன பிற பாகங்களாகவும் எல்லாம் பரிணமித்து நிற்கின்றன. இவற்றை ஒன்றுக்கொன்று உரிய முறையில் குறைகளின்றிப் பொருத்தியிருப்பதும் குழாய்கள், ஜவ்வுகள், திரவங்கள் மற்றும் நரம்புமண்டலம் கொண்டு இணைத்திருப்பதும் இவை அனைத்தையும் சமநிலை தவறாது இயக்கி வருவதும் நம் கற்பனைக்கு அறவே எட்டாத அற்புதங்களே! நமது புரிதலுக்கு எட்டும் அற்புதங்கள்

போக எட்டாத எண்ணற்ற அற்புதங்கள் பலவும் சேர்ந்துதான் நம் உடல் என்ற அற்புதமும் அது வசிக்கும் இந்தப் பிரபஞ்சம் என்ற மாபெரும் அற்புதங்களின் தொகுப்பும் இயங்கி வருகின்றன என்பதை எந்த சாமானியனும் சிந்திக்கும்போது அறிய முடியும்.

**உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொக்கிஷம்**



எப்படிப்பட்ட ஒரு பெரும் பொக்கிஷம் உங்கள் கைவசம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். இதன்மதிப்பை அளவிட அருகாமையில் உள்ள ஒரு மருத்துவமனையில் சென்று பணம்செலுத்தும் இடத்தின் (cash counter) அருகில் சென்று நின்று பாருங்கள். சிறுநீரகம் பழுதான ஒருநோயாளிக்கு இரத்தத்தை சுத்தீகரிக்க செய்யப்படும் டயாலிசிஸ் என்ற செயற்கை சிகிச்சைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 650 முதல் 1000 வரை வசூலிக்கப்படுவதை நீங்கள் காணலாம். சிறுநீரகம் அறவே செயலிழந்து போனவர்களுக்கு நீங்கள் உங்கள் உடலில் உள்ள இரு சிறுநீரகங்களில் ஒன்றை விற்க முன்வந்தால் அதை 5 இலட்சம் ரூபாய்க்கும் மேல் கொடுத்து வாங்க வாடிக்கையாளர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உடலின் ஒரே ஒரு உறுப்பின் கதை! இதுபோன்ற ஏராளமான இயந்திரங்கள் உங்களுக்காக இரவுபகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் உங்கள் உடல் என்ற பொக்கிஷங்களின் தொகுப்பின் மொத்த மதிப்பையும் இதைப் பராமரிப்பதற்கான செலவையும் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

இனி நீங்கள் சுவாசிக்க, உணவு ஜீரணிக்க, இரத்த ஓட்டத்திற்காக, உங்கள் கழிவு நீர் வெளியேற்ற, நீங்கள் காண்பதற்காக, நீங்கள் கேட்பதற்காக, தகவல் தொடர்புக்காக, உங்களுக்கு அழகூட்ட, உங்கள் இனப்பெருக்கத்திற்காக என உங்களை வாழவைக்கவே உழைக்கும் இயந்திரங்கள் பலவற்றையும் கொண்டதுதான் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள உடல் என்ற பொக்கிஷம்.

- **உறுதியாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு பூமியில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன் (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா? (திருக்குர்ஆன் 51:20,21)**

அத்தனை அற்புதமான உறுப்புக்களுக்கும் அப்பால் எலும்புக்கூடு, தசைமண்டலம், நரம்புமண்டலம், இரத்த சுழற்சி மண்டலம், ஜீரணம், சுவாசம், இனப்பெருக்கம், கழிவு வெளியேற்றம், இரத்த சுத்தீகரிப்பு, நோய் எதிர்ப்பு, வெப்பக்கட்டுப்பாடு, தற்காப்பு, தகவல் தொடர்பு இன்னும் இவை போன்ற பல கட்டமைப்புகளும் இணைந்து இயங்குவதே உங்கள் உடல்! இந்த விலைமதிப்பற்ற பொக்கிஷத்தின் மதிப்பை

உணர்ந்தவர்களால் இதை தூக்கியெறிந்து விட்டு செல்லத்தான் முடியுமா?

## இப்பிரபஞ்சம் என்ற பேரற்புதம்

எவ்வாறு நம் உடலுக்குள் நாம் தாங்கி நிற்கும் அற்புத சான்றுகள் இறைவனின் வல்லமையையும் அருளையும் நமக்கு உணர்த்துகின்றனவோ அவ்வாறே நாம் வாழும் இந்தப் பிரபஞ்சத்தின் விசாலத்தைப் பற்றிய அறிவு நமது உண்மை நிலையை அறிந்து கொள்ள உதவும்.

இன்று நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்த பூமிப்பந்தின் குறுக்களவு அதாவது விட்டம் - *12,756* கிலோமீட்டர். இதன் பரப்பளவு *510,10,00,000* சதுர கிலோமீட்டர்கள். இதிலும் மூன்றில் ஒரு பங்குதான் நிலம். மீதியோ கடலால் சூழப் பட்டுள்ளது. இதன் மீதுதான் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கானோர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். எதிர்காலத் தலைமுறைகள் வாழக் காத்திருக்கின்றன.



இந்த நிலப்பரப்பின் பின்னணியில் இதன் மீது சுமார் ஆறடி உயரமும் ஒன்றரை அடி குறுக்களவும் கொண்ட மனிதன் என்பவன் எவ்வளவு அற்பமான படைப்பு என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இதன் மீது நீர்க்குமிழி போல தோன்றி மறையும் அவனது ஆயுளும் அற்பமானது என்பதை நாம் அறிவோம். நமக்கு இவ்வளவு பிரம்மாண்ட மானதாகத் தெரியும் இந்த பூமியை இன்னபிற கோள்களோடும் சூரியனோடும் ஒப்பீடு செய்யும்போது இந்த பூமி எவ்வளவு அற்பமானது என்பது புரியும். நம் சூரிய குடும்பம் அது சார்ந்த பால்வெளி மண்டலத்தில் எவ்வளவு அற்பமானது என்பதையும் பால்வெளி மண்டலம் அது சார்ந்த அடுத்த மண்டலங்களின் தொகுப்பில் எவ்வளவு அற்பமானது என்றும் அடுத்தடுத்து ஒப்பீடு செய்யும்போது மனிதனின் அற்பநிலையின் உண்மை விளங்கும். அத்துடன் இவற்றையெல்லாம் படைத்து பரிபாலித்து வரும் நம் இறைவனின் உள்ளமையும் வல்லமையும் பற்றி உணர முடியும்.

நாம் விண்ணில் காணும் நட்சத்திரங்களும் சூரியனைப் போல குடும்பங்களைக் கொண்டவையே. அவற்றில் சூரியனைவிட பன்மடங்கு பிரம்மாண்டமானவையும் உண்டு. அவை நம்மிலிருந்து வெகு தொலைவில் உள்ளதால் சின்னஞ்சிறு பிரகாசிக்கும் புள்ளிகளாகத் தென்படுகின்றன.

● **அல்லாஹ்தான் உங்களுக்கு இப்பூமியைத் தங்குமிடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் உண்டாக்கியிருக்கிறான் மேலும், அவன்தான் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங்களை அழகாக்கி, சிறந்த ஆகார வசதிகளையும் அளித்தான் அவன்தான் அல்லாஹ் உங்களுடைய இறைவன் அகிலத்தாருக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ் மிக பாக்கியமுடையவன். (திருக்குர்ஆன் 40:64)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்

# படைத்தவனை பகுத்தறிவு கொண்டு அறிதல்

மனிதன் நிராசை அடைவதற்கும் தன்னம்பிக்கையற்று வாழ்வதற்கும் முக்கியமான காரணிகளில் ஒன்று தோல்விகள் அல்லது இழப்புக்கள் வரும்போது தனக்குத் துணையாக யாரும் இல்லையே என்ற மனப்பான்மையாகும். தன்னை இவ்வளவு பக்குவமாக படைத்ததோடு நில்லாமல் தன்னை சற்றும் கைவிடாமல் அயராது பரிபாலித்து வரும் அவனது இறைவனைப் பற்றிய அறியாமையே அதற்குக் காரணம்.

ஒருபுறம் இறைவனே இல்லை என்று சொல்லும் நாத்திகமும் மறுபுறம் இறைவன் அல்லாத அற்பமான படைப்பினங்களைக் காட்டி அவைகளே கடவுள்கள் என்ற தவறான சித்தரிப்பும் இறைவனைப் பற்றிய அறியாமையை மக்களிடையே வளர்க்கின்றன.. பகுத்தறிவை பயன்படுத்தி நம்மைப் பற்றியும் நமது நிலையைக் குறித்தும் சற்று சிந்தித்தால் மட்டுமே இந்த அறியாமை விலகும்.

## படைத்தவனை அறிவதற்கே பகுத்தறிவு

நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ள உடல் என்ற பேரற்புதமும் நம்மைச்சூழ்ந்து நிற்கும் இந்தப் பேரண்டம் என்ற அற்புதமும் தானாகவோ தற்செயலாகவோ தோன்றவும் முடியாது. தானாகவோ தற்செயலாகவோ அதி பக்குவமான முறையில் இயங்கவோ முடியாது என்கிறது பகுத்தறிவு! இதற்குப் பின்னால் ஒரு அளப்பரிய தன்னிகரற்ற சக்தியும் நுண்ணறிவும் அதிபக்குவமான திட்டமிடலும் அவற்றை அயராது இயக்குதலும் அவசியம் என்பதை பகுத்தறிவு நமக்கு உரக்கவே எடுத்துரைக்கிறது. அந்த தன்னிகரற்ற சக்தியையே நாம் தமிழில் கடவுள் அல்லது இறைவன் என்றும் ஆங்கிலத்தில் காட் என்றும் அரபு மொழியில் அல்லாஹ் என்றும் நாம் அழைக்கிறோம்.

இப்பிரபஞ்சத்தின் விசாலமும் நுட்பமும் குறையில்லா இயக்கமும் அதற்குப் பின் உள்ள பலவும் இவற்றைப் படைத்து பரிபாலித்து வருபவனின் வல்லமையையும் நுண்ணறிவையும் அதிபக்குவமான திட்டமிடுதலையும் பறைசாற்றி நிற்பதை நாம் உணரலாம். திருமறை குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:.

● **நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும்,பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமி இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும் மக்களுக்கு சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 2:164)**

● **நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?(திருக்குர்ஆன்**

56:57-59)

**● நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்?உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான்பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான் மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான் இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள். (திருக்குர்ஆன் 2:28)**

## அந்த இறைவன் எப்படிப்பட்டவன்?

அந்த தன்னிகரற்ற சக்தி என்பது நம்மைப்போல் பலவீனமான ஒருமனிதனைப் போலவோ அல்லது நம்மைவிடத் தாழ்ந்த ஒரு ஜீவியாகவோ அல்லது ஒரு வெறும் உணர்வற்ற ஒரு ஜடப்போருளாகவோ இருக்க முடியாது என்பதும் அதே பகுத்தறிவு நமக்குச் சொல்லும் பாடமாகும்.

**● கூறுவீராக! அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர். (திருக்குர்ஆன் 112 :1-4)**

அதாவது நம்மைப் படைத்த இறைவன் அவனது படைப்பினங்களைப் போலல்லாது ஏகனாகவும் தனித்தவனாகவும் தேவைகள் ஏதும் இல்லாதவனாகவும் உள்ளான். படைப்பினங்களைப் போல பெற்றோரும் பிள்ளைகளும் உறவினரும் இல்லாதவனாக உள்ளான். ஆதியும் அந்தமும் இல்லாமல் என்றென்றும் நிலைத்திருப்பவனாகவும் தன்னிகரற்றவனாகவும் உள்ளான்.

## இறைவனின் நெருக்கத்தை உணருதல்

ஆம் அன்பர்களே, அந்த தன்னிகரற்ற சர்வவல்லமை கொண்ட இறைவன் நமக்கு மிக அருகில் இருக்கிறான், நம் அழைப்பை ஏற்று நமக்கு உதவக் காத்திருக்கிறான் என்ற உண்மையை நீங்கள் அறிவீர்களா? இதோ இறைமறைக் குர்ஆனில் அவன் கூறுவதைக் காணீர்:

**● நாம் மனிதனைப் படைத்தோம். அவனது உள்ளத்தில் எழுகின்ற ஊசலாட்டங்களைக்கூட நாம் அறிகின்றோம். அவனது பிடரி நரம்பைவிடவும் அதிகமாக நாம் அவனிடம் நெருக்கமாயிருக்கின்றோம். (திருக்குர்ஆன் 50:16)**

**● (நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)**

நம்மைப் படைத்த இறைவன் நமக்கு நெருக்கத்தில் இருக்கிறான், நம் அழைப்பை ஏற்கக் காத்திருக்கிறான் என்ற ஆழமான புரிதல் யாருக்காவது உண்டாகிவிட்டால் அந்த மனிதனின் ஆளுமைக்கு மிக உறுதியான அஸ்திவாரம் அமைகிறது. அவனுக்குள் நிராசையும் மனச் சோர்வும் ஏற்பட வழியே இல்லை.

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore. Registered News paper in India No. KARTAM/2007/28173

ஆளமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்

# இறைவன் அல்லாதவற்றிடம் ஏமாறாதிருத்தல்

படைத்தவனை பகுத்துணர்தல் எவ்வாறு ஆளுமைக்கான அடித்தளமோ அதைப்போலவே படைத்தவன் அல்லாதவை இறைவன் அல்ல என்ற புரிதலும் மிக முக்கியமானதாகும். படைத்தவனை விட்டு மற்ற அனைத்தும் அவனது படைப்பினங்களே. இறைவனைப் பற்றிய அவநம்பிக்கை மக்களில் உருவாவதற்கு ஒரு காரணம் படைத்தவனை விட்டுவிட்டு படைப்பினங்களையும் மனிதர்களையும் உருவங்களையும் சமாதிகளையும் எல்லாம் காட்டி அவற்றைக் கடவுள் என்று சொல்லி செய்யப்படும் பிரச்சாரமாகும். அதனால் உண்மை இறைவனைக் குறித்த மதிப்பும் மரியாதையும் மக்களிடம் போய்விடுவதால் அவர்களிடம் மேற்கூறப்பட்ட இறை நெருக்கமும் அது சார்ந்த தன்னம்பிக்கையும் ஏற்படுவதில்லை.

## அற்பமானவை எவ்வாறு இறைவனாக முடியும்?

பரந்துவிரிந்த இம்மாபெரும் பிரபஞ்சத்தில் இன்று நாம் வாழும் பூமி ஒரு துகள் போன்றதுதான்! அந்த சிறு துகள் மேல் ஒட்டிக்கொண்டு இருக்கும் நுண்ணிய துகள் போன்றவர்களே நாம்! இப்போது எல்லையற்ற இப்பிரபஞ்சத்தை படைத்து திட்டமிட்டு இயக்கிக்கொண்டிருக்கும் அந்த இறைவனின் வல்லமையையும் நுண்ணறிவையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட இறைவனை இந்த பூமியின் மீது காணப்படும் ஏதாவது மனிதர்களுக்கோ மிருகங்களுக்கோ அல்லது இன்னபிற அற்பமான படைப்பினங்களுக்கோ ஒப்பீடு செய்து அவற்றை கடவுள் என்று அழைப்பதும் அவற்றிடம் பிரார்த்திப்பதும் அறிவார்ந்த செயலா என்பதை நாம் சிந்திக்கச் சொல்கிறான் இறைவன்:.

- **அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான் பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான் அவனே பின்னர் உங்களை மரிக்கச் செய்கிறான். பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான் -இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யக் கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா? அல்லாஹ் மிகவும் தூயவன் அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன். (திருக்குர்ஆன் 30:40)**
- **பூமியில் உள்ளவற்றிலிருந்து இவர்கள் தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றார்களே! அவை (இறந்தோரை) உயிர் கொடுத்து எழுப்புமா? (வான், பூமி ஆகிய) இவற்றில் அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், நிச்சயமாக இவையிரண்டும் அழிந்தே போயிருக்கும்.. (திருக்குர்ஆன் 21:21,22)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)*

## இதன் தீய விளைவுகள்

இறைவனுக்கு பதிலாக அவன் அல்லாதவற்றை வணங்குவது அந்த இறைவன் நமக்கு அயராது வழங்கிக் கொண்டிருக்கும் எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நன்றிகேடு ஆகும். மட்டுமல்ல, இச்செயல் இறைவனைச் சிறுமைப்படுத்துவதால் அவனது கோபத்தை நம்மீது வரவழைக்கவும் செய்கிறது. மனித மனங்களில் இறைவனைப்பற்றி அலட்சியப் போக்கை உண்டாக்கி விடுகிறது. அதன் காரணமாக

எதைச்செய்தாலும் தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற தைரியம் மக்களிடம் வந்து விடுகிறது. இவ்வாறு நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு இச்செயல் மிகப்பெரும் தடையாக நிற்பதால் சமூகத்தில் பாவங்கள் பெருக காரணமாகிறது. மேலும் இவ்வாறு மனிதர்கள் வெவ்வேறு விதமாக கடவுளைக் கற்பனை செய்து வணங்க முற்படும்போது ஒரே மனித குலம் பிளவுபட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாய்வது, இடைத்தரகர்கள் இறைவனின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைப்பது என்பனவும் நிகழ்கின்றன. பல குழப்பங்களுக்கும் தீமைகளுக்கும் காரணமாகும் இப்பாவத்தை மட்டும் இறைவன் மன்னிப்பதே இல்லை என்கிறது திருக்குர்ஆன். இப்பாவம் ஷிர்க் அல்லது இணைவைத்தல் என்று இஸ்லாமிய வழக்கில் அறியப்படுகிறது.

- **“...நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மாபெரும் பாவமாகும்.... (திருக்குர்ஆன் 31:13)**

- **“நிச்சயமாக இறைவன் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் இறைவனுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.“ (திருக்குர்ஆன் 4:48)**

- *நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :“யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம்புகுவார்.”*

  *அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) (நூல்: புகாரி)*

## ஆளுமை வளர்ச்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் எதிரானது

- பகுத்தறிவு படைத்த மனிதனை அவனைப் போன்ற மனிதனுக்கு முன்னாலும் அவனைவிட அறிவில் குறைந்த பிராணிகளின் முன்னாலும் மட்டுமல்ல, அறவே அறிவும் உணர்வும் அற்ற பொருட்களுக்கும் முன்னால் தலைகுனியவும், சாஷ்டாங்கம் செய்யவும் வைக்கிறது இந்தப் பாவம். சர்வ வல்லமையும் ஆற்றலும் கொண்ட இறைவன் முன்னால் மட்டுமே மனிதன் தலைகுனிய வேண்டும். அவனுக்கு மட்டுமே அஞ்சி வாழ வேண்டும் என்கிறது இஸ்லாம். அவ்வாறு வாழ்ந்தால் எந்த படைப்பினங்களையும் அஞ்ச வேண்டியதில்லை என்ற மனோ உறுதி வளர்க்கப் படுகிறது.

- கண்டதெல்லாம் கடவுள் என்று மனிதன் நம்பும்போது ஒரு தெய்வத்தை வணங்கிவிட்டு மற்ற தெய்வத்தை விட்டு விட்டால் அது ஏதாவது நம்மைச் செய்து விடுமோ என்ற பயமும் குற்ற உணர்வும் மனிதனை அலைக்கழிக்கின்றன. நாம் வணங்கும் தெய்வம் நம்மைப் போன்ற ஒரு படைப்பினமே அல்லது நம்மைவிடச் சிறியதே என்ற உணர்வு மேலிடுவதால் மனிதன் எதைக்கண்டாலும் பயந்து கோழையாக காலத்தைக் கழிக்கிறான். ஆனால் படைத்தவனை வணங்கும்போது மனிதனுக்கு படைப்பினங்களைப் பற்றிய பயமே போய்விடுகிறது. சர்வவல்லமையுள்ள என் இறைவன் என்னோடு துணை உள்ளான், அவனை மீறி எந்த படைப்பினமும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற உணர்வோடு அவன் வாழ்வதால், அவனுக்கு ஒப்பிட முடியாத தன்னம்பிக்கையையும் தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்கு தைரியமும் உண்டாகிறது

# மன அமைதிக்கான மாமருந்துகள்

வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கும் இழப்புகளை, சோதனைகளை மன உறுதியோடு எதிர்கொள்ளவும் அவற்றை சாதனைகளாக மாற்றவும் வழி சொல்கிறது இறைவனின் மார்க்கம் இஸ்லாம்.

இறை நம்பிக்கையின் ஒரு பாகமாக இறைவனின் விதியையும் ஒரு முஸ்லிம் நம்ப வேண்டும். இறைவன் முக்காலத்தையும் உணர்ந்தவன். அவன் இவ்வுலகில் நடந்த, நடக்கின்ற மற்றும் இனி நடக்கவுள்ள அனைத்து நிகழ்வுகளையும் பற்றி மிக மிக துல்லியமாக அறிவான் என்பதையும் அனைத்தும் அவனது கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்பதையும் புரிந்து கொண்டால் விதி என்பது என்ன என்று விளங்கும்.

## விதி நம்பிக்கை என்ற இடிதாங்கி

விதியை நம்புவதால் மனித குலத்திற்கு ஏற்படுகின்ற நன்மையை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**● பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (விதி) ஏட்டில் இல்லாமலில்லை நிச்சயமாக அது இறைவனுக்கு மிக எளிதானதேயாகும். உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றின் மீது நீங்கள் துக்கப்படாமல் இருக்கவும், அவன் உங்களுக்கு அளித்தவற்றின் மீது நீங்கள் (அதிகம்) மகிழாதிருக்கவும் (இதனை உங்களுக்கு இறைவன் அறிவிக்கிறான்) கர்வமுடையவர்கள், தற்பெருமை உடையவர்கள் எவரையும் இறைவன் நேசிப்பதில்லை. (திருக்குர்ஆன் 57:22,23)**

ஒரு சோதனை ஏற்படும் போது, அது இறைவன் நம் மீது ஏற்கனவே தீர்மானித்தது. நம் கையில் என்ன இருக்கின்றது? எனக் கருதி, இறை முடிவைத் திருப்தி கொள்வோம் என்று ஒரு மனிதன் நினைத்தால் அவனது மன அழுத்தம் அவனைப் பாதிக்க விடாமல் தற்காத்துக் கொள்கிறான். அதே போல எதிர்பாராத விதமாக செல்வம், புகழ் போன்றவை வந்தடையும் போது அவனை கர்வம் கொள்வதில் இருந்து இந்த நம்பிக்கை தடுத்தும் விடுகிறது.

## சோதனைகளை சாதனைகளாக மாற்ற..

நமக்கு ஏற்படும் சோதனைகளை சாதனைகளாக மாற்றும் வழியையும் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுப்பதைப் பாருங்கள்.

**● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**“சோதனைக்கு உள்ளான ஒருவர் இறைவன் இட்ட கட்டளைப்படி ‘இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்’ (நிச்சயமாக நாம் இறைவனுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச்செல்ல உள்ளவர்கள்) என்று கூறியபின் ‘இறைவா, நான் படும் துன்பத்திற்கு கூலி வழங்குவாயாக, நான் இழந்ததை விட மேலானதைக் கொண்டு இதற்குப் பகரம் வழங்குவாயாக!’ என்று பிரார்த்தித்தால் அவருக்கு இறைவன் மேலானதை வழங்குவான்” (நூல்: முஸ்லிம்)**

இறைநம்பிக்கையும் மறுமை நம்பிக்கையும் கொண்டவர்களுக்கு மட்டுமே இந்த மன அமைதிக்கான மாமருந்துகள் பயனளிக்கும் என்பதையும் நாம் உணரவேண்டும்.

ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்

# வாழ்க்கையின் நோக்கம் பற்றி அறிதல்

வாழ்க்கை என்பதற்கு இலக்கு என்பது இருந்தால் மட்டுமே மனிதனின் ஆளுமை வளர்ச்சி என்பது அர்த்தம் பெறும். மாறாக வாழ்க்கை என்பது இலக்கற்றது, தற்செயலானது என்று எண்ணுவோர் எவ்வளவுதான் தங்கள் ஆளுமைகளை வளர்த்துக் கொண்டாலும் அவை ஒரு நொடியில்- ஒரு தற்கொலை மூலம்- பயனற்றதாக ஆகிவிடுகிறது. அதைத்தான் நாம் மேலே **IAS** அகாடமி நிறுவனர் சங்கர் அவர்களின் தற்கொலை நிகழ்ச்சி மூலம் அறிய வந்தோம்.

**வாழ்க்கை உயரிய நோக்கம் கொண்டது**

ஒரு மாபெரும் தூசுப் படலத்தில் காணப்படும் ஒரு நுண்ணிய துகள் போன்றது இன்று நாம் வாழும் பூமி என்ற கோளம். இதன்மீது ஒட்டிக்கொண்டு இருக்கும் மற்றொரு நுண்ணிய துகள் போன்றவர்கள் நாம். சூரிய குடும்பத்தின் அங்கமான இந்த பூமியின் சொந்த அச்சின் மீதான சுழற்சியும் வேகமும் சூரியனிலிருந்து அதன் தூரமும் சூரிய குடும்பத்தில் மற்ற அங்கங்களின் தன்மைகளும் இயக்கமும் எல்லாம் பற்பல அளவைகளை (parameters) மிகமிக நுணுக்கமாகக் கட்டுப்படுத்தி சமநிலையில் வைத்துள்ளதால்தான் என்பது அறிவியல் நமக்கு கற்றுத்தரும் உண்மை. இந்த அளவைகளில் சிறு மாற்றம் ஏற்பட்டு சமநிலை தவறினால் மனிதர்களாகிய நாமும் இன்ன பிற ஜீவிகளும் வாழ்வதே சாத்தியமில்லை என்றும் அறிவோம்.

இன்னும் நம் உடலுக்குள்ளேயும் கவனியுங்கள். எந்த உடலை விட்டு தற்கொலைகள் மூலம் சிலர் ஓடிப் போக முயல்கிறார்களோ அந்த உடலுக்குள்ளும் பரிபாலிக்கப்படும் அற்புதங்களைப் பற்றி சற்று சிந்தித்துப்பாருங்கள்.

ஒரு நோய் வந்து டாக்டரிடம் போனால் அவர் நோயைக் கண்டுபிடிப்பதற்காக பல டெஸ்டுகளுக்கு எழுதித் தருவார். இறுதியில் எல்லா டேஸ்டுகளையும் முடித்துக் கொண்டு மீண்டும் டாகடரிடம் செல்லும்போது உங்கள் ரிபோர்ட்டைப் பார்ப்பார். அதில் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் சர்க்கரை அளவு, உங்கள் உடலின் வெப்ப நிலை, இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, நாடித் துடிப்பு போன்ற பலதும் குறிப்பிட்ட வரையறைகளில் (range) உள்ளதா என்று பார்த்து விட்டு எது வரையறைக்கு மீறி உள்ளதோ அதன் அடிப்படையில் நோயைக் கணித்து மருந்து தருவதை நாம் அறிவோம். அப்படியென்றால் இப்படிப்பட்ட எண்ணிலடங்கா பல அளவைகளும் கட்டுப்பாட்டில் பரிபாலிக்கப் படுவதனால்தானே நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்?

ஆக, இப்பிரபஞ்சம் முழுவதும் நமக்கு வாய்த்துள்ள உடல் என்ற பெரும் பொக்கிஷமும் நம்மை இங்கு வாழவைப்பதற்காகவே இயங்கிக்கொண்டிருக்கும் போது நாம் வீணுக்காகப் படைக்கப் பட்டிருப்போமா? இதையே இறைவன் தன் இறுதிவேதமாம் திருக்குர்ஆனில் கேட்கிறான்:.

- **நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள்**

**நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா? (திருக்குர்ஆன் 23:115)**

## வாழ்க்கை என்பது வெற்றியைத் தீர்மானிக்கும் ஒரு பரீட்சை

பகுத்தறிவோடு சிந்திக்கும்போது இவை எதுவும் வீணுக்காக அல்ல. ஒரு மகத்தான உறுதியான திட்டத்தின் கீழ்தான் நாம் படைக்கப் பட்டிருக்கிறோம் என்பது புலனாகும். இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்வது உண்மை என்று புலப்படும். அந்த உண்மை என்னவெனில்-

- இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சைக்கூடமாகப் படைத்துள்ளான் என்பது.
- இதில் நமது செயல்கள் அனைத்தும் பதிவு செய்யப் படுகின்றன.
- யார் இறைவனுடைய கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு சொர்க்கம் என்ற நிரந்தர வசிப்பிடம் உண்டு.
- யார் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். அவர்களுக்கு நரகம் என்ற நிரந்தர வேதனைகள் கொண்ட வசிப்பிடம்தான் கிடைக்கும்.
- இந்தப் பரீட்சைக் கூடத்திற்குள் நாம் அனைவரும் அவரவருக்கு விதிக்கப்பட்ட தவணையில் வந்து போகிறோம்.
- இங்கு இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து செய்யப் படும் செயல்கள் நன்மைகளாகவும் கீழ்படியாமல் மாறாகச் செய்யப்படும் செயல்கள் தீமைகளாகவும் பதிவாகின்றன.
- இவ்வாறு ஒவ்வொருவருக்கும் நன்மைகள் அல்லது தீமைகள் செய்வதற்கு சுதந்திரமும் வாய்ப்பும் அளிக்கப்படும் இடமே இந்த தற்காலிகப் பரீட்சைக் கூடம்!
- **உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 67:2 )**
- **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 21:35)**

### பரீட்சை முடிவுகள்

- **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்களுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

இந்த குறுகிய வாழ்வில் நாம் சந்திக்கும் மரணம் என்பது வாழ்க்கையின் முடிவல்ல, மாறாக உண்மையான மற்றும் நிரந்தரமான வாழ்வின் தொடக்கமே என்பதைப் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் ஒருவர் சந்திக்கும் துன்பங்களும் சோதனைகளும் அவரை நிலைகுலைய

ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்

# வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை அறிந்து பயணித்தல்

ஒரு நீளமான ஒரு கோடு போடுங்கள். அதன் ஆரம்பத்தில் ஒரு புள்ளியை குறியுங்கள். மறுமை வாழ்க்கை என்பதுதான் அந்த நீளமான கோடு என்றால் அந்த ஆரம்பப் புள்ளிதான் இன்று நாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் வாழ்க்கை. உங்கள் நிரந்தரமான எதிர்காலம் சொர்க்கத்தில் இருக்குமா அல்லது நரகத்தில் இருக்குமா என்பதை இந்தப் புள்ளிதான் தீர்மானிக்கிறது.

**வாழ்க்கைப் பரீட்சை பற்றிய விவரம்:**

இந்த உலகம் என்ற பரீட்சைக்கூடத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வந்து செல்கிறோம். இங்கு நாம் இறைவன் வழங்கும் எவல்-விலக்கல்களின் படி வாழ்கிறோமா இல்லையா என்பதுதான் பரீட்சை! அதாவது இவ்வுலகின் சொத்தக்காரனான இறைவன் எதை எவுகிறானோ அதை அவன் செய்ய வேண்டும். அதுவே புண்ணியம் என்பது. அவன் எதை விட்டும் தடுக்கிறானோ அவற்றில் இருந்து விலகி வாழ வேண்டும். அதுவே பாவம் என்பது. இந்த செயல்பாட்டில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு துணைபோகும் வண்ணம் ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் இறைவன் வழங்குகிறான். அதற்குப் பெயர்தான் இஸ்லாம்.

**இஸ்லாம் என்றால் என்ன?**

இஸ்லாம் என்றால் அதன் பொருள் கீழ்படிதல் என்பது. அதன் இன்னொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கையிலும் அமைதி பெறலாம். மறுமையிலும் அமைதி அல்லது மோட்சம் பெறலாம் என்பது இந்த இறைமார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும்

அதாவது இறைவன் கற்பிக்கும் கட்டுப்பாடுகளைப் (discipline) பேணி வாழ்வதால் தனிநபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பெறப்படும் அமைதிக்குப் பெயர்தான் இஸ்லாம்! இவ்வாறு கட்டுப்பாடு மிக்க வாழ்வை வாழ்ந்ததற்குப் இறைவன் புறத்திலிருந்து மறுமையில் வழங்கப்படும் பரிசே நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கம்! இந்தக் கட்டுப்பாட்டை உதாசீனம் செய்தும் மீறியும் வாழ்வோருக்கு தண்டனையாகத் தரப்படுவதே நரகம்.

சொர்க்கம் மற்றும் நரகம் என்பவை எப்படி இருக்கும் என்பதை இங்கு தெரிந்து கொள்வதும் மிக அவசியமான ஒன்றாகும். ஏனெனில் அதைப் பொறுத்தே வாழ்க்கையின் இலக்கை மக்கள் தீர்மானிப்பது அமைகிறது.

**மறுமை, இறுதித்தீர்ப்பு நாள், சொர்க்கம், நரகம்:**

இறுதிவேதம் திருக்குர்ஆன் மற்றும் இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் கூற்றுக்கள் வாயிலாக நாம் அறியும் உண்மைகள் இவை:

● நாம் ஒவ்வொருவருக்கும் மரணம் என்பது எவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஒன்றோ அதைப்போலவே இன்று நாம் காணும் உலகுக்கும் தீர்மானிக்கப்பட்ட முடிவு உள்ளது. அதாவது ஒருநாள் இந்த பரீட்சைக்கூடம் இழுத்து மூடப்படும். அதாவது இறைவனின் கட்டளை

வந்ததும் இவ்வுலகம் முற்றாக அழிக்கப் படும். அதன் பிறகு மீண்டும் இறைவனிடம் இருந்து கட்டளை வரும்போது விசாரணைக்காக அனைத்து மனிதர்களும் உயிர் கொடுத்து எழுப்பப் படுவார்கள். அதுவே இறுதித்தீர்ப்பு நாள் என்று அறியப்படுகிறது.

● இறுதித் தீர்ப்புநாள் அன்று நமது வினைகளின் பதிவேடுகள் வெளியிடப்படும். இந்த வாழ்க்கையில் நாம் செய்த புண்ணியங்களும் பாவங்களும் பட்டியலிடப்பட்டு ஒப்பீடு செய்யப்படும். அதன் அடிப்படையில் சொர்க்கமோ அல்லது நரகமோ நமது நிரந்தர வாழ்விடங்களாக விதிக்கப்படும்.

● **எவர்களுடைய நன்மையின் எடை கனக்கிறதோ அவர்கள்தாம் வெற்றி அடைவார்கள். எவர்களுடைய (நன்மையின்) எடை குறைகின்றதோ அவர்கள் தமக்குத் தாமே நஷ்டத்தை உண்டுபண்ணிக் கொண்டு எந்நாளுமே நரகத்தில் தங்கிவிடுவார்கள். (திருக்குர்ஆன் 23:102, 103)**

## சொர்க்கம் என்பது எப்படி இருக்கும்?

அது ஓர் சாந்தியும் சமாதானமுமான இருப்பிடம். அங்கு கவலை, தீமை, பகை, சோர்வு, நோய், முதுமை, பஞ்சம், போன்ற எதற்குமே இடம் இல்லை. திகட்டாத இன்பங்களில் ஊறித் திளைக்கும் இடம் அது.. தோட்டங்களும் பூங்காவனங்களும் மாசற்ற நீரூற்றுகளும் உயர் மாளிகைகளும் சுவைமிக்க கனிகளும் உணவுகளும் பானங்களும் அளவின்றி அனுபவிக்க இறைவன் ஏற்பாடு செய்த இடம்! என்றும் இளமையோடு இருக்கும் இடம்! காரணம் மரணம் என்பது இனி இல்லையல்லவா?

● **நிச்சயமாக எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவன் அவர்கள் இறைநம்பிக்கை கொண்ட காரணத்தினால் நேர் வழிகாட்டுவான் இன்பமயமான சுவனபதிகளில் அவர்களுக்குக் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும். (திருக்குர்ஆன் 10:9)**

● **பொன் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கும்இன்னும் அங்கு அவர்கள் மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அதிலுள்ளன. இன்னும், "நீங்கள் இங்கு என்றென்றும் தங்கியிருப்பீர்கள்!" (என அவர்களிடம் சொல்லப்படும்.) (திருக்குர்ஆன் 43:71)**

## நரகம் எப்படி இருக்கும்?

சொர்க்கத்தைப் போலவே நரகமும் மறுபுறம் காத்திருக்கிறது. அது இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி மறந்து தான்தோன்றித்தனமாக வாழ்ந்த கொடியோருக்காகவும் இறைவனையும் அவன் தூதர்களையும் வேதங்களையும் நிராகரித்தோருக்காகவும் காத்திருக்கிறது. கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் நடுவே மரணமற்ற வாழ்வும் அகோர பசியும் தாகமும் அதைத்தீர்க்க உணவாக முட்செடிகளும் கொதிநிலை அடைந்த பானங்களும் என்று தொடர் வேதனைகளின் இருப்பிடமாக இருக்கும். நரக வேதனைகள் பற்றி திருக்குர்ஆன் எச்சரிக்கிறது:

● **நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக! அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ**

**குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்!...... கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர.! (திருக்குர்ஆன் 78:21 )**

● **அவர்களுக்கு நரகத்தில் (நெருப்பு) விரிப்புகளும் அவர்களுக்கு மேலே நெருப்புப் போர்வைகளும் உண்டு - இன்னும் இவ்வாறே அநியாயம் செய்பவர்களுக்கு நாம் கூலி கொடுப்போம். (திருக்குர்ஆன் 7:41)**

ஆக, நரக வேதனை என்பது தாங்க முடியாதது. அதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் நாம் மரணத்திற்கு முன்பாக இறைவனிடம் மன்னிப்பு கோரி திருந்திய வாழ்க்கை வாழவேண்டும்.

ஆக, இவை இரண்டும்தான் நம்மை எதிர்நோக்கியுள்ள உண்மைகள். எதுவேண்டுமோ அதை தேர்ந்தெடுக்கவும் அதன்படி வாழ்வை அமைத்துக்கொள்ளவும் நமக்கு வாய்ப்புள்ளது. எதுவரை?.. மரணம் நம்மை வந்து அடையும் வரை!

ஆம் அன்பர்களே, இவ்வுலகைப் பொறுத்தவரையில் இதுதான் இறைவனின் ஏற்பாடு. இதைத் தட்டிக்கேட்க நமக்கு எந்த உரிமையும் ஆற்றலும் கிடையாது. நாம் மிகமிக அற்பமானவர்கள். நம் சிற்றறிவைக் கொண்டு இப்பரந்த பிரபஞ்சத்தின் படைப்பாளனின் திட்டங்களை ஆராயவும் எடைபோடவும் முடியாது என்பதை ஒப்புக்கொண்டு அவன் தனது தூதர்கள் மூலமாக எதை அறிவித்துத் தருகிறானோ அவற்றை அப்படியே ஏற்பதுதான் அறிவுடைமை!

# தற்கொலை பற்றி இறைவன்

உடல், பொருள் ஆவி என அனைத்துக்கும் உரிமையாளன் இறைவனே. இங்கு உயிர் என்ற விடயம் அவனைப் பரீட்சித்துப் பார்பதற்காக மனிதனுக்கு தற்காலிகமா தரப்படும் ஒன்று. இந்தப் பரீட்சையின் போது அதனை நாமாகவே போக்கிக்கொள்வது என்பது இறைவனிடம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

● **உங்கள் கைகளாலேயே நீங்கள் அழிவை தேடிக்கொள்ளதீர்கள் ! (அல்குர்ஆன் 2:195)**

● **உங்களை நீங்களே கொலை செய்து கொள்ளாதீர்கள் ! இறைவன் உங்கள் மீது மிக கருணை உள்ளவனாக இருக்கிறான்!- (குர்ஆன் 4:29)**

இறைவனின் எச்சரிக்கையையும் மீறி தற்கொலை செய்து கொள்வோரின் நிலை என்ன என்பது பற்றி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறுவதையும் பாருங்கள்:

● ”ஒரு (கூரான) ஆயுதத்தால் தற்கொலை செய்து கொண்டவர் (மறுமையில்) தீசூழ் நரகிலும் தமது கையில் அந்தக் கூராயுதத்தை வைத்துக் கொண்டு, அதனால் தமது வயிற்றில் தாமே என்றென்றும் முடிவின்றிக் குத்திக் கொண்டே இருப்பார். விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டவர், தீசூழ் நரகிலும் என்றென்றும் முடிவின்றி வி'த்தைக் குடித்துக் கொண்டேயிருப்பார். மலையின் உச்சியிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டவர், தீசூழ் நரகில் (மீண்டும் மீண்டும்) தள்ளப் பட்டு, மேலும் கீழும் நிரந்தரமாகக் குதித்துக் கொண்டே இருப்பார்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) நூல்: புஹாரி)

ஆளுமை வளர்ச்சிக்கு ஆழமான அடித்தளங்கள்

# ஊகங்களைத் தவிர்த்து உறுதியானதைக் கடைபிடித்தல்

பகுத்தறிவு கொண்டு ஆராயும்போது இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைத்துள்ளான் என்பது உறுதியாகப் புலப்படும் இதுதான் இறுதியான மற்றும் உறுதியான உண்மை ஆகும். இதைத் தவிர நீங்கள் வேறு எந்த கோணத்தில் சிந்தித்தாலும் வாழ்க்கையின் பின்னணி பற்றியும் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும் எந்தத் தெளிவும் பெறமுடியாது என்பது உறுதி! இதைத் தவிர இவ்விடயத்தில் சொல்லப்படும் அனைத்தும் வெற்று மனித ஊகங்களே. ஊகங்கள் மக்களின் மனஉறுதியைக் குலைத்து கோழைத்தனத்தை உருவாக்குகின்றன. அதனால் அவர்களுக்கு சோதனைகளைத் தாங்கும் துணிவு இருப்பதில்லை.

## நாத்திகம் தவிர்த்து நாசம் தவிர்ப்போம்

நாத்திகக் கொள்கை இறைவனையும் மறுமை வாழ்வையும் மறுக்கின்ற காரணத்தால் சமூகத்தில் பற்பல குழப்பங்களுக்கும் தீமைகளுக்கும் காரணமாகிறது.

- தன்னைத் தட்டிகேட்க யாருமில்லை என்ற தைரியம் மேலிடுவதால் பாவங்கள் பெருகுகின்றன.
- நாத்திகத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கையின் நோக்கம் என்று எதுவும் இல்லை. வாழ்க்கை அர்த்தமற்றது அல்லது நோக்கமற்றது என்ற சிந்தனை தற்கொலைகளுக்கு தூண்டும் காரணங்களில் மிகப் பிரதானமான ஒன்றாகும்.
- வாழ்க்கையில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் பேணவேண்டும் என்பதற்கு உந்துதலும் கிடையாது.
- இறைவன் தரும் சரி-தவறு அல்லது நன்மை-தீமை இவற்றைப் பிரித்தறிவிக்கும் அளவுகோலை நாத்திகர்கள் மறுப்பதால் நன்மை தீமைகளை மனம்போன போக்கில் அவர்களே சுயமாக முடிவு செய்கின்றனர். எனவே மது, போதைபொருள், விபச்சாரம், கொலை போன்ற வன்பாவங்களையும் அவர்கள் சந்தர்ப சூழலுக்கேற்ப நியாயப்படும் அவலங்கள் நிகழ்கின்றன.

இவ்வாறு ஒழுக்கம், கட்டுப்பாடு இவை மறைந்து குடும்பங்களிலும் சமூகத்திலும் தான்தோன்றித்தனமும் குழப்பங்களும் அதிகரிக்கின்றன. நாத்திகர்கள் அவர்கள் ஏற்படுத்தும் குழப்பங்களுக்கான தண்டனைகளை மறுமையில் அனுபவிக்க உள்ளார்கள் என்ற செய்தியைத் திருக்குர்ஆன் வசனங்கள் வாயிலாக அறிகிறோம்.

- **சத்தியத்தை மறுப்போருக்கு அவர்களுடைய செல்வங்களும், குழந்தைகளும் இறைவனின் (தண்டனையி)லிருந்து எதையும் நிச்சயமாக தடுக்கப்படமாட்டாது இன்னும் அவர்கள்தாம் (நரக) நெருப்பின் எரிபொருள்களாக இருக்கின்றனர். (திருக்குர்ஆன் 3:10)**

எனவே ஊகங்களை கைவிட்டு இறைவன் கூறும் உண்மைகளைப் பற்றிப் பிடிப்பது மட்டுமே இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரும். வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்க்கும். சோதனைகளை எதிர்கொள்ளும் மனோதைரியத்தையும் கொடுக்கும்.

# தோல்விகளை எதிர்கொள்ளும் நிதானம்

இதுவரைக் கூறப்பட்ட அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு இறைவன் கற்றுத்தரும் வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழ்வோர் தோல்விகளைக் கண்டு துவளுவதில்லை. தோல்விகளை, இழப்புக்களை, சோதனைகளை எதிர்கொள்ளும்போது ஆறுதல் கூறும் ஏராளமான விடயங்களை இந்த இறைநெறி கற்றுத்தருகிறது. ஒரு சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

### 1. வாழ்க்கைப் பரீட்சையில் சோதனைகள் சகஜமே என்றறிதல்

நமது தனிநபர் வாழ்க்கையில் அல்லது குடும்ப வாழ்வில் அல்லது வியாபாரத்தில் அல்லது தொழிலில் அல்லது கல்வியில் நாம் சந்திக்கும் ஏதேனும் பின்னடைவுகளும் இழப்பும் அவை எவ்வளவு பெரியவை ஆயினும் சரியே, அவை அனைத்தும் இந்தக் குறுகிய வாழ்க்கைப் பரீட்சையின் பாகங்களே என்பதை இஸ்லாம் கற்றுத் தருகிறது. செல்வமும் செழிப்பும் இலாபமும் வெற்றியும் எல்லாம் எவ்வாறு வாழ்க்கையின் பாகங்களோ அதே போலவே வறுமையும் பஞ்சமும் நஷ்டமும் தோல்வியும் நம்மை வந்தடையும் என்பதை நம்மைப் படைத்தவனே கூறுகிறான் கேளுங்கள்:

- **மேலும், சிறிதளவு அச்சத்தாலும், பசியாலும், உடைமைகள், உயிர்கள் மற்றும் விளைபொருட்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் திண்ணமாக உங்களை நாம் சோதிப்போம். (இந்த நிலைகளில்) பொறுமையை மேற்கொள்கின்றவர்களுக்கு (நபியே!) நீர் நற்செய்தி கூறுவீராக! (திருக்குர்ஆன் 2:155)**

### 2. இறைவனிடம் தஞ்சம் புகுதல்

அவ்வாறு சோதனைகளை எதிர்கொள்ளும்போது நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் இறைவனே நமக்குக் கற்றுத் தருகிறான்:

- **அவர்கள் (எத்தகையோர் எனில்) தங்களுக்கு ஏதேனும் துன்பம் நேரிடும்பொழுது “இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்” (நிச்சயமாக நாம் இறைவனுக்கே உரியவர்கள். மேலும் நிச்சயமாக அவனிடமே மீள்பவர்கள்) என்று சொல்வார்கள். அத்தகையோர் மீது அவர்களின் இறைவனிடமிருந்து நல்வாழ்த்துக்களும், நல்லருளும் உண்டாகும். இன்னும் அத்தகையோர்தாம் நேர்வழி பெற்றவர்கள்! (திருக்குர்ஆன் 2:156, 157)**

அதாவது நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனிடமிருந்தே இந்த சோதனை வந்துள்ளது, அவனே நம் இறுதி அடைக்கலம் என்ற உணர்வோடு பொறுமையை மேற்கொள்வோருக்கு மறுமையில் இறைவனிடம் மகத்தான பரிசுகள் காத்திருகின்றன.

### 3. மறுமை என்ற ஆறுதல்

மரணம் என்பது வாழ்கையின் முடிவல்ல. மாறாக அதுவே உண்மையான மற்றும் நிரந்தரமான வாழ்க்கையின் தொடக்கமே என்ற புரிதல் மன அமைதிக்கான மாமருந்தாகும். அதுவும் நம்மைப் படைத்து நம்மீது அளவிலா கருணை பொழிந்து பரிபாலிக்கும் இறைவனிடம்தான் நாம்

.
திரும்பிச்செல்கிறோம் என்ற உணர்வு நமக்குள் மேலிடுமானால் விந்தைகள் நிகழாதா என்ன? இன்னும் அந்த அருளாளன் திகட்டாத இன்பங்கள் நிறைந்த சொர்க்கத்தில் நம்மை வரவேற்கக் காத்திருக்கிறான் என்று உணர்ந்தால் மனதின் இரணங்கள் மாயாமாய் மறையாதா?

## 4. மறுமையே நிலையானது என்றறிதல்

● **“இறைவன் மீதாணையாக! மறுமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகின் நிலையானது, உங்களில் ஒருவர் தமது சுட்டு விரலை கடலில் வைத்தால் அதில் ஒட்டிக்கொள்ளும் நீரளவு போன்றதே” என்பது நபிமொழி (முஸ்லிம்)**

தொழுகைகள், பிரார்த்தனைகள், திருக்குர்ஆன் ஓதுதல் போன்ற அன்றாடப் பயிற்சிகள் வாயிலாக நாம் மறுமைக்காகவே வாழ்கிறோம் என்ற உணர்வு இயற்கையாகவே இஸ்லாமியர் மனங்களில் விதைக்கப்படுகிறது. அதனால் எதையும் தாங்கும் இதயமும் உருவாகி விடுகிறது.

## 5. இறைவன் அரவணைக்கிறான் என்றறிதல்

**:“இறைவன் தனது கருணையில் நூறில் ஒரு பாகத்தை மட்டுமே பூமியில் உயிரினங்களுக்கு இடையே பகிர்ந்து அளித்துள்ளான். அதன் ஒரு பாகம் மட்டுமே தாய்ப்பாசம்” என்று நபிகளார் கூறியுள்ளார்கள். (புகாரி).**

அப்படிப்பட்ட அளவற்ற அருளாளனின் அரவணைப்பு என்றும் நம்மைவிட்டுப் பிரிவதில்லை என்ற உறுதியான உணர்வு இருந்தால் அனைத்து இழப்புகளும் நமக்கு துச்சமாகவே மாறிவிடும்.

## 6. யாதும் ஊரே யாவரும் உறவே என்ற உணர்வு

இன்றைய கலாச்சார சீர்கேடு உருவாக்கியுள்ள “நான் மற்றும் என் குடும்பம்” என்ற குறுகிய சிந்தனையும் தன்னம்பிக்கையை இழக்க வைக்கும் காரணியாகும். அதை விடுத்து உலகெங்கும் பரவி இருப்பது நமது குடும்பமே, மனிதகுலம் அனைத்தும் நம் உறவே என்ற பரந்த சிந்தனையின் பால் இறைவன் அழைக்கிறான்:

● **மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். (திருக்குர்ஆன் 49:13)**

இனம், நிறம், மொழி, இடம் போன்ற எல்லைகளைக் கடந்து சகமனிதனை சகோதரனாக பாவிப்பதும் அவனது துயர் துடைப்பதும் ஒரு கட்டாயக் கடமையாகவும் புண்ணியத்தைத் தேடித் தரும் வழிபாடாகவும் கற்பிக்கிறது இஸ்லாம்.

● **“மண்ணிலுள்ள மனிதர்களை நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்” என்பது நபிமொழி.**

● **“அண்டை வீட்டுக்காரன் பசியோடு இருக்கும் போது தான் மட்டும் வயிறார உண்பவன் இறைவிசுவாசி அல்ல” என்கிறது இன்னொரு நபிமொழி.**

இஸ்லாமியர்களை இன்று புயல், வெள்ளப்பெருக்கு போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளத் தூண்டிக் கொண்டு இருப்பதும் இந்த உந்துகோல்களே!

இன்னும் இது போன்ற ஏராளமான காரணங்களைக் கூறலாம்.

# இறைவன் பரிந்துரைக்கும் அழகிய ஆளுமை!

இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களைக் குறித்து இறைவன் அறிமுகம் செய்கிறபோது இவ்வாறு கூறுகிறான்:

● **நிச்சயமாக இறைவனின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (திருக்குர்ஆன்: 33:21)**

அந்த அறிமுகத்திற்கேற்ப நபிகளார் சொல், செயல், இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் அவர்கள் பெற வேண்டிய உரிமைகள் என அனைத்து செயல்பாடுகளிலும் நபிகளார் அழகான முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிச் சென்றார்கள். . இறைவனே அவரது நற்குனத்திற்கு சான்று வழங்குவதையும் காணலாம்:

● **மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த, மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர். (திருக்குர்ஆன் 68:4)**

அன்று வாழ்ந்தவர்கள் மீது மட்டுமல்ல, இனி இறுதி நாள் வரை இவ்வுலகில் தோன்றக்கூடிய அனைத்து இறைவிசுவாசிகளையும் நேசிக்கக் கூடிய ஒரு மனிதரை நாம் காண முடியுமா? இதோ இறைவனே அவரைப் பற்றி கூறுகிறான்:

● **(இறைவிசுவாசிகளே) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார் நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால், அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது அன்றி, உங்(கள்நன்மை)களையே அவர் பெரிதும் விரும்புகிறார் இன்னும் இறைவிசுவாசிகள் மீது மிக்க கருணையும் மிகுந்த கிருபையும் உடையவராக இருக்கின்றார். (திருக்குர்ஆன் 9:128)**

● இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் உலகின் 25%க்கும் அதிகமான மக்கள் அந்த மாமனிதரைக் கண்ணால் காணாமலேயே அவரை நேசிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அவரது கட்டளைகளை சிரமேற்கொண்டு பின்பற்றுகிறார்கள். கடந்த பதினான்கு நூற்றாண்டுகளில் அவரை அவ்வாறு பின்பற்றியவர்கள் பலகோடி.

● ஆன்மிகம், சமூகம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், வரலாறு, அறிவியல், மொழி, தத்துவம், இலக்கணம், இலக்கியம், வாழ்வியல், உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் அவரது வழிகாட்டுதல் மேலோங்கி விளங்குகிறது. முஹம்மது நபிகளாரின் (ஸல்) ஆரோக்கியத்திற்கான வழிகாட்டுதல்கள் அனைத்து மருத்துவத்துறையிலும் மேற்கோள் காட்டப்படுபடுகின்றன. சட்டம், நீதி, நிர்வாகம் மற்றும் பதிவுத்துறைகளும் அவர் கோலோச்சுகின்ற துறைகளாகும்.

## மேதைகளின் கருத்துக்கள்

அவரைப் பற்றி மேற்குலக மேதைகளும் வரலாற்று ஆய்வாளர்களும் கூறியவற்றில் சில:

● **மைக்கேல் ஹைச். ஹார்ட்** என்ற ஆய்வு வல்லுனர் உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நபர்களில், முதலில் 1000 பேரை தெரிவு செய்தார் பின்பு அதிலிருந்து 100 நபர்களை மட்டும் தேர்வு செய்தார். இப்படி ஆய்வு செய்து முதலிடத்தை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு கொடுத்தார். அதற்கான காரணத்தையும் இவ்வாறு

கூறுகிறார்:

"சமயம், உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் ஒரு சேர மகத்தான வெற்றி பெற்றவர், வரலாற்றில் அவர் ஒருவரே தாம்.எளிமையான வாழ்க்கைப் படியில் துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் கொள்கை ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த அரசியல் தலைவருமாவார்கள். அவர்கள் உயிர் நீத்து பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும், எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகிறது."

● தத்துவ போதகர், சொற்பொழிவாளர், இறைத்தூதர், சட்ட நிபுணர், மாபெரும் போர் வீரர், கருத்துக்களை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுப் பூர்வமான கொள்கைகள் நம்பிக்கைகளை நிலை நாட்டியவர், மாயைகள்.ஃ.கவர்ச்சிகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கை வழி நாகரீகத்தை உருவாக்கி அளித்த மாமேதை, ஒரே ஆன்மீகத் தலைமையில் இருபது பூவுலகப் பேரரசுகளின் நிறுவனர்தாம் முஹம்மத் அவர்கள்.

- **லா மார்ட்டின்**(Lamartine) -

●"சண்டையும் சச்சரவும் நிறைந்த குலம் கோத்திரங்களையும், நாடோடிகளையும் தமது முயற்சியால் இணைத்து ஒரு இருபது ஆண்டுக்குள்ளேயே நாகரிகம் மிகுந்த - ஒரு பலம் பொருந்திய சமூகமாக எவ்வாறுதான் அவரால் உருவாக்க முடிந்ததோ!!"

**- தாமஸ் கார்லைல்** (Thomas_Carlyle), Heroes_and_Hero_Worship

● முஹம்மதை நான் அலசி ஆராய்ந்து பார்த்து விட்டேன். அவர் மனிதகுலத்தைக் காக்க வந்தவர் (Saviour of Humanity). இந்த நவீன உலகின் சர்வாதிகாரியாக அவரைப் போன்ற ஒருவர் வருவாரேயானால், இன்றைக்கு மிகவும் அவசியமான தேவைகளாக இருக்கின்ற அமைதியையும் சந்தோ'த்தையும் கொண்டு வந்து பிரச்சனைகளைத் தீர்க்க அவரால் மட்டுமே முடியும். இன்று இருப்பதுபோல, வருங்காலத்திலும் முஹம்மதின் மார்க்கம் ஐரோப்பாவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மார்க்கமாகவே இருக்கும் என்று நான் தீர்க்கதரிசனம் சொல்வேன். அடுத்த நூறு ஆண்டுகளில் இங்கிலாந்தை, ஏன் இங்கிலாந்தை, ஐரோப்பாவையே ஆளக்கூடிய வாய்ப்பு ஒரு மதத்துக்கு இருக்குமானால் அது இஸ்லாமாகத்தான் இருக்கமுடியும்.

**- ஜார்ஜ் பெர்னார்ட் ஷா,** த ஜெனியுன் இஸ்லாம்.
The Genuine Islam,Singapore Vol. 1, No. 8.1936).

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)

To

.....................................................................................


.....................................................................................

.....................................................................................

.....................................................................................

# உங்களைக் கண்காணிக்க பொருத்தப்பட்ட CCTV கேமராக்களே  உங்கள் கண்கள் ! 



❖தன்னை ஒருவரும் பார்க்கவில்லையென்று அவன் எண்ணுகிறானா? அவனுக்கு நாம் இரண்டு கண்களை ஆக்கவில்லையா? மேலும் நாவையும், இரண்டு உதடுகளையும் (ஆக்கவில்லையா)? (திருக்குர்ஆன் 90:7-9)

❖"உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை;"
❖(திருக்குர்ஆன் 41:22)